**நவம்பர் – 19**

# TNPSC துளிகள்

- ஹவாய் நிறுவனத்துடன் இணைந்து அதன் அனைத்து விமான நிலையங்களிலும் வைஃபை-7 (அருகலை) தொழில்நுட்பத்தைச் செயல்படுத்துவதில் ஓமன் விமான நிலையங்கள் உலகில் முதல் இடத்தைப் பிடித்துள்ளன.
- 2B-மும்பை மெட்ரோ வழித்தடத்திற்கான மண்டலே பணிமனை ஆசியாவின் மிகப் பெரிய மெட்ரோ பணி மனையாக திறக்கப்பட்டுள்ளது.
- இந்திய இராணுவமானது, இந்தியா-வங்காளதேச எல்லைக்கு அருகில் அசாமின் துப்ரி மாவட்டத்தில் உள்ள லச்சித் போர்புகன் இராணுவ நிலையத்தில் மூன்று புதிய அரண் படையையும், பீகாரில் உள்ள கிஷன்கஞ்ச் மற்றும் மேற்கு வங்காளத்தில் சோப்ரா ஆகிய இடங்களில் ஆதரவுத் தளங்களையும் நிறுவியுள்ளது.
  - இதனால், தனது எட்டு வடகிழக்கு மாநிலங்களுக்கான குறுகிய நில இணைப்பான சிலிகுரி வழித் தடம் அல்லது 'கோழிக் கழுத்து வழித் தடம்' அருகே மூன்று புதிய ஆதரவுத் தளங்களுடன் இந்தியா தனது கிழக்குப் பாதுகாப்பை பலப்படுத்துகிறது.
- பெங்களூருவைச் சேர்ந்த நெலே அறக்கட்டளையானது, பின்தங்கிய மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கு ஆதரவளிக்கும் அதன் விரிவான பணிகளை அங்கீகரிப்பதற்காக 2025 ஆம் ஆண்டு மூலத்வா உலக விருதுக்கு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.
- மகாராஷ்டிர மாநில முதல்வர் புதிய வேளாண் துறை முத்திரையையும், "நிலையான வேளாண்மை, வளமான விவசாயி" என்று பொருள்படும் "சஷ்வத் ஷெட்டி, சம்ருத்த ஷேத்காரி" என்ற முழக்கத்தினையும் வெளியிட்டார்.
- உலக பயன்பாட்டு தினம் ஆனது நவம்பர் மாதத்தின் இரண்டாவது வியாழக்கிழமை அன்று அனுசரிக்கப்படுகிறது என்பதோடு, மேலும் 2025 ஆம் ஆண்டில் பயன்பாட்டுத் திறன், பயன்பாட்டுப் பொறியியல் மற்றும் உலகளாவிய பயன்பாட்டை மேம்படுத்தச் செய்வதற்காக நவம்பர் 13 ஆம் தேதியன்று இத்தினம் அனுசரிக்கப்பட்டது.
  - 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, “Emerging Technologies and the Human Experience” என்பதாகும்.

# தேசியச் செய்திகள்

## RuTAG 2.0 சந்திப்பு

- ஊரகத் தொழில்நுட்ப நடவடிக்கைக் குழு 2.0 (RuTAG 2.0) வருடாந்திர மறுமதிப்பாய்வு சந்திப்பானது கௌஹாத்தியின் இந்தியத் தொழிநுட்பக் கல்விக் கழகத்தில் (IIT) நடைபெற்றது.
- இந்த மதிப்பாய்வு ஆனது ஏழு RuTAG (IIT கௌஹாத்தி, SKUAST-காஷ்மீர், IIT டெல்லி, IIT பம்பாய், IIT ரூர்க்கி, ICAR-NAARM ஐதராபாத், IIT மெட்ராஸ்) மையங்களையும், மாநிலத் துறைகள், தொழில்துறைகள் மற்றும் சமூக அமைப்புகளுடனான அவற்றின் கூட்டுறவுகளிலும் மேற்கொள்ளப்பட்டது.
- RuTAG 2.0 வருடாந்திர முன்னேற்ற அறிக்கையும் (2024–25) வெளியிடப்பட்டது.
- வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை, புதுப்பிக்கத் தக்க எரிசக்தி, நீர் சுத்திகரிப்பு மற்றும் கிராமப்புற கைவினைப் பொருட்கள் ஆகியவற்றில் 56க்கும் மேற்பட்ட தற்போதையத் திட்டங்களை இந்த

அறிக்கை காட்டுகிறது.

- வேளாண்மை மற்றும் அக்வா வோல்டாயிக்ஸில் (நீர் மற்றும் சூரிய சக்தி சார்ந்தது) புத்தாக்க மையம் (CIAAV) மற்றும் நல்வாழ்வு சார் தயாரிப்புகளின் கண்டுபிடிப்புக்கான ஒருங்கிணைந்த மையம் (IFWPI) ஆகியவை திறக்கப்பட்டன.
- புதுமை மற்றும் கூட்டாண்மை மூலம் தொழில்நுட்பம் சார்ந்த கிராமப்புற வளர்ச்சியை முன்னேற்றுவதற்கான உத்தி சார் செயல் திட்டங்கள் குறித்து இதில் விவாதிக்கப் பட்டன.
- வடகிழக்குப் பிராந்தியத்தில் பல்வேறு துறைகளில் ஆராய்ச்சி, கிராமப்புறத் தொழில் முனைவு மற்றும் நிலையான வாழ்வாதார உருவாக்கம் ஆகியவை குறித்து இந்தச் சந்திப்பு எடுத்துரைத்தது.



## சம்வாட் மாநாடு 2025



- 12வது சம்வாட் மாநாடு ஜாம்ஷெட்பூரில் ஹோ, முண்டா, சந்தால் மற்றும் ஓரான் பழங்குடியினரால் நிகழ்த்தப்பட்ட பாரம்பரியச் சடங்குகளுடன் தொடங்கியது.
- திறப்பு விழாவில் ப்னெர், சகுவா மற்றும் நகாடா போன்ற கருவிகளைப் பயன்படுத்தி பிரார்த்தனை சடங்குகள் இடம் பெற்றன என்ற நிலையில் அதனைத் தொடர்ந்து ஹோ சமூகத்தின் அக்ரா சுத்திகரிப்பு சடங்கு நிகழ்த்தப்பட்டது.
- இந்த மாநாடு பழங்குடியினரின் அறிவைப் பாதுகாத்தல், கலாச்சாரத் தொடர்ச்சியை

ஊக்குவித்தல் மற்றும் தலைமுறைகளுக்கு இடையேயான தொடர்புகளை வலுப் படுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.

## முத் நியோமா விமானப்படை தளம்




- கிழக்கு லடாக்கில் உள்ள முத் நியோமா விமானப்படை தளம் செயல்பாட்டுக்கு வந்து உள்ளது.
- இது இந்தியாவின் விரைவான எதிர் நடவடிக்கை திறனை மெய் கட்டுப்பாட்டுக் கோட்டுக்கு அருகில் வலுப்படுத்தும்.
- இந்த விமானப்படை தளம் ஆனது சுமார் 13,700 அடி உயரத்திலும் மெய் கட்டுப்பாட்டுக் கோட்டிலிருந்து சுமார் 25 கிலோமீட்டர் தொலைவிலும் அமைந்துள்ளது.
- இந்த ஓடுபாதை போர் விமானங்கள், போக்குவரத்து விமானங்கள் மற்றும் ஹெலி காப்டர்கள் இயங்க ஆதரிக்கும் என்பதோடு, மேலும் இது லே, கார்கில் மற்றும் தோய்ஸ் ஆகியவற்றிற்குப் பிறகு லடாக்கின் நான்காவது பெரிய விமானப்படைத் தளமாக இது அமைகிறது.
- இந்தத் தளம் பிராந்திய மேம்பாட்டினை ஆதரிக்கும் அதே வேளையில் ஹன்லே, லோமா மற்றும் நியோமா போன்ற தொலைதூரக் குடியிருப்புகளுக்கான அணுகலை மேம்படுத்தும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.


## தேசிய TDS மாநாடு




- போபால் ஆனது 22வது அகில இந்திய வருடாந்திர வருமான வரிப் பிடித்தம் (TDS) மாநாட்டை நடத்துகிறது.
- இந்த மாநாடு வருமான வரித் துறையால் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

- புதிய TDS விதிகள் மற்றும் கூட்டு வழிகாட்டுதல்கள் உட்பட 2025 ஆம் ஆண்டு வருமான வரிச் சட்டத்தில் திருத்தங்கள் குறித்து இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட்டது.
- வரி இணக்கம் மற்றும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட டிஜிட்டல் கருவிகள் குறித்தும் இந்த நிகழ்வு கவனம் செலுத்தியது.

## ஏற்றுமதியாளர்களுக்கான கடன் உத்தரவாதத் திட்டம்





- ஏற்றுமதியாளர்களுக்கான கடன் உத்தரவாதத் திட்டத்திற்கு (CGSE) அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இது தேசியக் கடன் உத்தரவாத அறங்காவலர் நிறுவனம் லிமிடெட் மூலம் 100 சதவீத கடன் உத்தரவாதத்தை வழங்கும்.
- இந்தத் திட்டம் ஆனது, உறுப்பினர் கடன் வழங்கும் நிறுவனங்கள் MSME நிறுவனங்கள் உட்பட தகுதியுள்ள ஏற்றுமதியாளர்களுக்கு 20,000 கோடி ரூபாய் வரை பிணையம் இல்லாத கடனை வழங்க உதவுகிறது.
- நிதிச் சேவைகள் துறையானது இந்தத் திட்டத்தை செயல்படுத்தும்.
- இந்தத் திட்டம் பணப்புழக்கத்தை அதிகரிப்பது, சந்தைப் பல்வகைப்படுத்தலை ஆதரிப்பது மற்றும் இந்திய ஏற்றுமதியாளர்களின் உலகளாவிய போட்டித் தன்மையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## UPI மற்றும் Fawri+ இணைப்பு


- Fawri+ சேவை மூலம் பஹ்ரைனின் மின்னணு நிதி பரிமாற்ற அமைப்புடன் ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகத்தினை (UPI) இணைக்க இந்திய தேசிய கொடுப்பனவு கழகம் மற்றும் பஹ்ரைனின் BENEFIT ஆகியவை கூட்டு சேர்ந்துள்ளன.
- இந்த அமைப்பு ஆனது இரு நாடுகளிலும் உள்ள பயனர்கள் RBI மற்றும் பஹ்ரைன் மத்திய வங்கியின் வழிகாட்டுதலின் கீழ் உடனடியாகவும் பாதுகாப்பாகவும் பணத்தை அனுப்பவும் பெறவும் அனுமதிக்கும்.
- இந்த ஒத்துழைப்பு 2019 ஆம் ஆண்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் 2024 ஆம் ஆண்டு இந்தியா-பஹ்ரைன் உயர் கூட்டு ஆணையக் கூட்டத்தின் போது செய்யப்பட்ட உறுதி மொழிகளின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது.

- இந்தக் கூட்டாண்மையானது, பொருளாதார உறவுகளை வலுப்படுத்தும் என்பதோடு, நிதி உள்ளடக்கத்தை ஆதரிக்கும் மற்றும் மக்களிடையேயான இணைப்பை ஆழப் படுத்தும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- இந்தியாவிற்கும் பஹ்ரைனுக்கும் இடையிலான இருதரப்பு வர்த்தகம் ஆனது 2024 முதல் 2025 ஆம் ஆண்டு வரை 1.64 பில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்தது.




## சர்வதேசச் செய்திகள்

### ஷேக் ஹசீனாவுக்கு மரண தண்டனை




- வங்காளதேசத்தின் சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் ஆனது முன்னாள் வங்காளதேச பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு மரண தண்டனை விதித்துள்ளது.
- முன்னாள் உள்துறை அமைச்சர் அசாதுஸ்ஸாமன் கான் கமல் மற்றும் முன்னாள் காவல்துறைத் தலைவர் சௌத்ரி அப்துல்லா அல்-மாமுன் ஆகியோரும் இதே குற்றச் சாட்டுகளில் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்கப்பட்டனர்.
- நீதிபதி முகமது கோலம் மோர்டுசா மஜும்தர் தலைமையிலான மூன்று பேர் கொண்ட தீர்ப்பாயம் இந்தத் தீர்ப்பினை வழங்கியது.
- ஹசீனா, கமல் மற்றும் மாமுன் ஆகியோர் மீது கொலை, கொலை முயற்சி, சித்திரவதை மற்றும் பிற மனிதாபிமானமற்ற செயல்கள் உட்பட ஐந்து குற்றச்

சாட்டுகள் சுமத்தப்பட்டது.

- ஹசீனா மற்றும் கமல் ஆகியோர் தப்பியோடியவர்களாக அறிவிக்கப்பட்டு, அவர்கள் ஆஜராகாத நிலையில் விசாரணை நடைபெற்றது.
- தீவிரமடைந்து வரும் அமைதியின்மை காரணமாக, 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 04 ஆம் தேதியன்று ஹசீனா வங்காளதேசத்திலிருந்து தப்பிச் சென்றார்.

### சீனாவின் டைப் 076 சிச்சுவான் கப்பல்



Chinese PLA Navy's first Type 076 amphibious assault ship "Sichuan" launches first sea trial

- சீனாவின் முதல் டைப் 076 நில நீர்ப் பயன்பாட்டுத் தாக்குதல் கப்பலான சிச்சுவான், அதன் முதல் கடல் சோதனையை முடித்து ஷாங்காய் கப்பல் கட்டும் தளத்திற்குத் திரும்பியது.
- அதன் சோதனை ஓட்டத்தில் உந்துவிசை, மின் அமைப்புகள் மற்றும் முக்கிய உள் உபகரணங்கள் அனைத்தும் எதிர்பார்க்கப்படும் தரநிலைகளை பூர்த்தி செய்தன.
- இந்தக் கப்பல் ஆனது 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- நிலையான இறக்கை கொண்ட விமானங்கள், ஹெலிகாப்டர்கள் மற்றும் நீர் நிலப் பயன்பாட்டு உபகரணங்களை இயக்குவதற்கான மின்காந்த விசை விற்பொறி மற்றும் தடுப்பான் அமைப்புகள் இந்தக் கப்பலில் உள்ளன.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

### மனிதர்களைச் சுமந்து செல்லக் கூடிய கடலடி வாகனங்கள்

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் விசாகப்பட்டினத்தில் உள்ள கடற்படை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆய்வகம் (NSTL) ஆனது கண்ணி வெடி எதிர்ப்பு நடவடிக்கைகளுக்காக புதிய மனிதனைச் சுமந்துச் செல்லக் கூடிய தானியங்கி கடலடி வாகனங்களை (MP-AUVs) உருவாக்கியுள்ளது.
- இந்த வாகனங்கள் பக்கவாட்டு ஸ்கேன் சோனார் மற்றும் கடலடி ஒளிப்படக் கருவிகளைப் பயன்படுத்தி கண்ணி வெடி போன்ற பொருட்களை நிகழ் நேரத்தில்

கண்டறிந்து வகைப்படுத்துகின்றன.

❖ உள்ளார்ந்தக் கற்றல் அமைப்புகள் AUV வாகனங்கள் தன்னியக்கமாக, இலக்குகளை அடையாளம் காணவும் செயல்பாட்டு முயற்சியைக் குறைக்கவும் அனுமதிக்கின்றன.

❖ கடலடி ஒலி தொடர்பு ஆனது பல AUV வாகனங்களின் செயல்பாடுகளின் போது தரவைப் பகிர அனுமதிக்கிறது.




## ககன்யான் வான் மிதவை அமைப்பு




❖ உத்தரப் பிரதேசத்தில் உள்ள பாபினா கள ஆயுத ஏவல் தளத்தில் ககன்யான் வீரர்கள் பெட்டகத்திற்கான வான் மிதவைகளின் (பாராசூட்) முக்கிய சோதனையை இஸ்ரோ நடத்தியது.

❖ ககன்யான் பணிக்கான பாராசூட் அமைப்பைத் தகுதிப்படுத்துவதற்காக வேண்டி ஒருங்கிணைந்த பிரதான வான் மிதவை தரையிறக்கச் சோதனைகளின் ஒரு

பகுதியாக இந்தச் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

- வீரர்கள் பயணப் பெட்டகத்தின் வான் மிதவை அமைப்பு, நிலைப்படுத்தப்பட்ட தரை இறக்கத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்ட நான்கு வகையான பத்து பாராசூட்களைக் கொண்டுள்ளது.
- இதன் வடிவமைப்பைச் சரிபார்க்க இரண்டு முக்கியப் பாராசூட்டுகளுக்கு இடையில் தாமதமாக துண்டிக்கப்படுவதை உள்ளடக்கிய ஒரு தீவிரச் சூழ்நிலையை இந்தச் சோதனை செயல் விளக்கியது.
- இந்திய விமானப்படையின் IL-76 விமானத்தைப் பயன்படுத்தி 2.5 கிலோமீட்டர் உயரத்தில் இருந்து ஓர் உருவகப்படுத்தப்பட்ட வீரர்கள் பயணப் பெட்டகம் கீழே விடப்பட்டது.
- பாராசூட் செயல்பாடு இதில் திட்டமிட்டபடி செயல்பட்டது என்பதோடு இந்த அமைப்பு நிலையான இறக்கம் மற்றும் மென்மையான தரையிறக்கத்தை அடைந்தது.

## முதல் குவாண்டம் வைர நுண்ணோக்கி




- இந்தியா உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட தனது முதல் குவாண்டம் வைர நுண்ணோக்கியை வெளியிட்டது என்பதோடு, இது பம்பாயின் இந்தியத் தொழில்நுட்ப கல்விக் கழகத்தில் உள்ள பி-குவெஸ்ட் குழுவால் தேசிய குவாண்டம் திட்டத்தின் கீழ் உருவாக்கப் பட்டது.
- இந்தச் சாதனம் வைரத்தில் காணப்படும் நைட்ரஜன் வெற்றிட மையங்களைப் பயன்படுத்தி நுண்ணிய அளவிலான முப்பரிமாண காந்தப்புல ஆய்வினை மேற் கொள்கிறது.
- இந்த தொழில்நுட்பம் ஆனது நரம்பியல், பொருட்கள் ஆராய்ச்சி மற்றும் குறைக்கடத்தி சில்லுகளின் அழிவில்லாத மதிப்பீடு ஆகியவற்றில் இதன் பயன்பாடுகளை ஆதரிக்கிறது.
- இந்த அமைப்பு முப்பரிமாணச் சில்லுகளின் கட்டமைப்புகள் உட்பட மேம்பட்ட

மின்னணுச் சாதனங்களில் மறைந்த அடுக்குகளின் காந்தப்புல ஆய்வினை செயல் படுத்துகிறது.

- இந்தத் திட்டமானது இந்தியாவிற்கு குவாண்டம் வைர நுண்ணோக்கித் துறையில் முதல் காப்புரிமையைப் பெற்றது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## மோமா கிளாடியா மீனின் மறு கண்டுபிடிப்பு





- பருவகால கில்லி மீன் இனமான மோமா கிளாடியா பொலிவியாவில் மீண்டும் கண்டுபிடிக்கப் பட்டது.
- இந்தத் தளத்தில் ஆறு பருவகால கில்லி மீன் இனங்களும் இருந்தன என்பதோடு இது அமேசான்-லானோஸ் டி மோக்சோஸ் மாறுநிலை மண்டலத்தில் அதிகப் பல்லுயிரியலைக் குறிக்கிறது.
- தற்காலிக குளங்களில் வாழ்கின்ற மோமா கிளாடியா, அங்கு அதன் முட்டைகள் ஊடு வளர்ச்சித் தடை /டயபாஸ் எனப்படும் உயிரியல் செயல்முறை மூலம் வறண்ட காலங்களைத் தாங்குகின்றன.

## உலகில் அதிகம் ஊடுருவியுள்ள நீர்நில வாழ் உயிரினம் - கரும்புத் தேரை


- கரும்புத் தேரையானது உலகில் அதிகம் ஊடுருவியுள்ள இனங்களில் ஒன்றாகும் என்பதோடு இது சுற்றுச்சூழல் அமைப்புகளைச் சீர்குலைக்கிறது.
- அறிவியல் ரீதியாக ரைனெல்லா மெரினா என்று அழைக்கப்படும் கரும்புத் தேரை மத்திய மற்றும் தென் அமெரிக்காவை பூர்வீகமாகக் கொண்டது.
- இது கரும்பு வயல்களில் வேளாண் பூச்சி கட்டுப்பாட்டிற்காக பல நாடுகளில் இது அறிமுகப் படுத்தப்பட்டது.

- ❖ இந்த இனம் மிக வேகமாகப் பரவி புதிய பகுதிகளில் அதிக எண்ணிக்கையிலான ஒரு தொகையை உருவாக்குகிறது.
- ❖ இது அதன் காது சுரப்பிகள்/பரோடிட் சுரப்பிகளில் இருந்து, அதன் வேட்டையாடி இனங்களைக் கொல்லும் புஃபோடாக்சின்களை வெளியிடுகிறது.
- ❖ இது பூர்வீக உயிரினங்களை உட்கொள்வதன் மூலமும் உள்ளூர் வனவிலங்குகளுடன் போட்டியிடுவதன் மூலமும் சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதிக்கிறது.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலக எரிசக்தி கண்ணோட்ட அறிக்கை 2025





- ❖ சர்வதேச எரிசக்தி முகமையானது (IEA) உலகளாவிய எரிசக்திப் போக்குகள், உமிழ்வு மற்றும் பாதுகாப்பை விவரிக்கும் 2025 ஆம் ஆண்டு உலக எரிசக்தி கண்ணோட்ட அறிக்கையை வெளியிட்டது.

- இந்த அறிக்கையில் மூன்று சூழல்கள் உள்ளன:
  - தற்போதைய கொள்கைகள் சூழல் (CPS),
  - அறிவிக்கப்பட்ட கொள்கைகள் சூழல் (STEPS), மற்றும்
  - 2050 ஆம் ஆண்டில் நிகர சுழி உமிழ்வுகள் (NZE) சூழல்கள்.
- CPS சூழலின் கீழ், 2050 ஆம் ஆண்டிற்குள் எண்ணெய்த் தேவை ஒரு நாளைக்கு 113 மில்லியன் பீப்பாய்களாக அதிகரிக்கிறது என்பதோடு மேலும் 2035 ஆம் ஆண்டிற்குள் உலகளாவிய எரிசக்தி தேவை 90 எக்ஸாஜூல்கள் அதிகரிக்கிறது.
- அனைத்துச் சூழல்களும் உலக வெப்பநிலை 1.5°C அளவைத் தாண்டும் என்பதைக் காட்டுகின்றன என்ற நிலையில் CPS ஆனது 2100 ஆம் ஆண்டிற்குள் சுமார் 3°C வெப்ப மயமாதலுக்கு வழி வகுக்கிறது.
- இங்கு பெரும்பாலும் சீனா ஒரு நாடாக 20 முக்கிய கனிமங்களில் 19 கனிமங்களைச் சுத்திகரிகிறது என்ற ஒரு நிலையில், முக்கிய கனிமங்களுக்கான முக்கிய விநியோகச் சங்கிலி மீதான அபாயங்களை இந்த அறிக்கை குறிப்பிடுகிறது.
- இந்தக் கனிமங்களில் பாதிக்கும் மேற்பட்டவை ஏற்றுமதியை சார்ந்து அதன் கட்டுப் பாட்டின் கீழ் உள்ளன என்ற நிலையில் இது உலகளாவிய எரிசக்திப் பாதுகாப்பிற்கு அபாயங்களை அதிகரிக்கிறது.

# மாநிலச் செய்திகள்

## பஞ்சாபில் பாரத் நெட் திட்டம்





- திருத்தப்பட்ட பாரத் நெட் திட்டத்தை அதன் பிரதேசம் முழுவதும் முழுமையாகச் செயல்படுத்திய முதல் மாநிலம் பஞ்சாப் ஆகும்.
- இந்தத் திட்டமானது எல்லைப்புற மாநிலத்தை எந்த இடத்திலிருந்தும் நேரடியாகக் கண்காணிக்க உதவுகிறது.
- நவம்பர் மாத இறுதிக்குள் இன்னும் ஒரு கிராமம் மட்டுமே இதில் உள்ளடக்கப்பட உள்ளதுடன், இணையம் மற்றும் அகலக் கற்றை/பிராட்பேண்ட் சேவைகள் ஆனது

சேவையில்லாத 43 பகுதிகளுக்கு விரிவுபடுத்தப் பட்டுள்ளன.

- கிராமப்புறங்களில் இணைய வழிச் சுகாதார சேவை மற்றும் இணைய ஆளுகை சேவைகளை ஆதரிப்பதோடு, அனைத்து கிராமப் பஞ்சாயத்துகள், வீடுகள் மற்றும் நிறுவனங்களுக்கும் பிராட்பேண்ட் இணைப்பை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## இந்தியாவின் மிகப்பெரிய பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி ஆலை




- கர்நாடகாவின் விஜயநகரில் அமைக்கப்பட்டுள்ள இந்தியாவின் மிகப்பெரிய பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி ஆலையை JSW எனர்ஜி தொடங்கியுள்ளது.
- இந்த மையம் JSW ஸ்டீல் நிறுவனத்தின் நேரடி ஆக்சிஜன் நீக்க இரும்பு அலகுக்கு ஆண்டிற்கு 3,800 டன் பசுமை ஹைட்ரஜனையும் ஆண்டிற்கு 30,000 டன் பசுமை ஆக்ஸிஜனையும் வழங்கும்.
- இந்திய சூரிய மின் ஆற்றல் கழகத்தின் பசுமை ஹைட்ரஜன் மாற்றத்திற்கான ஒரு மூலோபாயத் திட்டத்தின் (SIGHT திட்டம்) கீழ் JSW எனர்ஜி நிறுவனத்தின் 6,800 டன் ஒதுக்கீட்டின் ஒரு பகுதியாக இந்த விநியோக ஒப்பந்தம் அமைகிறது.
- JSW எனர்ஜி மற்றும் JSW ஸ்டீல் ஆகியவை 2030 ஆம் ஆண்டிற்குள் ஆண்டிற்கு 85,000–90,000 டன் பசுமை ஹைட்ரஜன் மற்றும் 720,000 டன் பசுமை ஆக்ஸிஜனை விநியோகிக்கத் திட்டமிட்டுள்ளன.

# இதரச் செய்திகள்

## திம்புவில் புத்தர் நினைவுச் சின்னங்களின் கண்காட்சி

- பூடானின் திம்புவில் உள்ள தாஷிச்சோட்சோங்கின் கிராண்ட் குயென்ரியில் புத்தரின் புனித நினைவுச்சின்னங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன.
- இந்த கண்காட்சியில் சர்வதேசப் புத்த கூட்டமைப்பு (IBC) நிர்வகிக்கும் மூன்று கருத்துரு சார் கண்காட்சிகள் இடம்பெற்றுள்ளன.
- முதல் கண்காட்சி இந்தியாவில் 'மகத்தான குரு' என அழைக்கப்படும் குரு பத்ம சாம்பவாவின் வாழ்க்கை மற்றும் புனித தளங்களைக் காட்டுகிறது.

- இரண்டாவது கண்காட்சி, புத்தர் நினைவுச் சின்னங்களின் அகழ்வாராய்ச்சி மற்றும் முக்கியத்துவம் உட்பட, சாக்கியர்களின் புனித மரபுகளை வெளிக் கொணர்கிறது.
- மூன்றாவது கண்காட்சியானது புத்தரின் வாழ்க்கை மற்றும் போதனைகளை முன் வைக்கிறது.
- இந்தக் கண்காட்சி பூடானின் நான்காவது மன்னர் ஜிக்மே சிங்யே வாங்சுக்கின் 70வது பிறந்த நாளுடன் ஒன்றி வருகிறது.



## புதிய டெரோசர் இனங்கள் - பக்கிரிபு வாரிட்சா




- அறிவியலாளர்கள் பக்கிரிபு வாரிட்சா என்ற புதிய வெப்ப மண்டல குறிப்பிட்ட இனங்களை ஒதுக்கி உண்ணும் டெரோசர் இனத்தை அடையாளம் கண்டுள்ளனர்.
- புதைபடிவமாக்கப்பட்ட டைனோசர் எடுத்த வாந்தியின் உள்ளே இருக்கும் இனங்கள் ரெகுர்கிடலைட் என்று அழைக்கப் படுகின்றன.

- பக்கிரிபு வாரிட்சா என்பது பிரத்யேகமான குறிப்பிட்ட இனங்களை ஒதுக்கி உண்ணும் கட்டமைப்புகளுக்கு பெயர் பெற்ற செட்டோனோகாஸ்மாடிடே என்ற குடும்பத்தைச் சேர்ந்தது.
- ஸ்பினோசௌரிட் டைனோசர்கள் மற்றும் பெரிய ஆர்னிதோசெரிஃபார்ம் ஸ்டெரோசர்கள் பிராந்திய புதைபடிவ ஆதாரங்களின் அடிப்படையில் ரெகுர்கிடேட்டின் சாத்தியமான உற்பத்தியாளர்களாகக் கருதப்படுகின்றன.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★